வம்ச விருத்தி வழி.

ணவாள ரெட்டி

ம்பட்டி.

Y 592, R
N16
179258

ரெட்டிகளின்

வம்ச விருத்தி வழி.

அழகிய மணவாள ரெட்டி.

விருதுபட்டி:
சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்,
பதிப்பிக்கப்பெற்றது.
1916.

ஸமர்ப்பணம்.

தம்மையேனும், தம் வீட்டையேனும், தம் குலத்தையேனும், தம் நாட்டையேனும் உயர்த்தப் பாடுபடும் பெரியர் பாதார விந்தங்களில், இந்நூலை எமது பக்தி பூர்வமான வந்தனத்துக் குறிகுறியாக ஸமர்ப்பிக்கின்றேன். ஆசிரியர்.

" நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்." திருவள்ளுவர்

ஓம்:

வேண்டுகோள்.

குலத்தவரே,

நமது ஜாதியின் அபிவிருத்திக்கான இச்சிறு புத்தகம் போன்ற பல புத்தகங்களோ, துண்டுப் பத்திரங்களோ அச்சிட்டு, அடிக்கடி வெளியிட்டு, உங்களை உற்சாகப் படுத்த வேண்டு மென்றும்; கோடை விடு முறை நாளிலும் கால விடு முறை நாளிலும், கிராமங்கள் தோறும் சென்று, சுகாதார விருத்தி வழி, விவசாய விருத்தி வழி, பஞ்சாயத்தாரா லாக வேண்டிய கிராமச் சீர்திருத்த முறை என்ற இவை போன்ற பல இன்றியமையாத விஷயங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்து உங்களை முன்னேற்றவேண்டு மென்றும்; சிற்றூர் தொறும் பள்ளிக் கூடமும், பேரூர் தொறும் அதனோடு சங்கமும் ஏற்படுத்திப் பரஸ்பரம் உதவி செய்து கொள்ள உங்களைத் தூண்ட வேண்டு மென்றும்; இன்னும் எத்தனையோ நமது குலத்துக் கிதமானவைகள் எம்மாலாய வரை செய்து எம் கடமையை ஒருவாறு நிறைவேற்ற வேண்டு மென்று நெடுநாளாக எமக் கெண்ணமுண்டு.

வேண்டுகோள்.

ஆயின், "அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் செல்விச் செவிலியாலுண்டு" என்ற வள்ளுவர் வாக்குப்படி, பொருள்செவிலித் தாயின் அசட்டையால் இது வரை தடை பட்டுக் கொண்டே வந்தது. இப்பொழுதும் அவள் கிருபை கிட்டுவதற்கான வழி காணோம். இனி என் செய்வது? காலம் தாழ்ப்பதில் காரியம் கெடும் என்றெண்ணி, பண முட்டுப் பாட்டைக் கவனியாது ஒருவாறு இதையேனும் வெளியேற்ற முன் வந்தோம். பரோபகார சீலர்கள், இதைப்பெற்றுக் கொண்டு தம்மாலியன்ற பண உதவி செய்து எம் நோக்கத்தை ஆதரிப்பதோடு, இந்நூலிலுள்ள விஷயங்களையும் பல தடவை வாசித்து மனத்திற்கொண்டு, நம்மவரில் படிக்கத் தெரியாத சகோதரர்களுக்கும் சொல்லும்படி மிகத் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

ஓம்

முன்னுரை:

எம் குலாபிமானிகாள்,

> "உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
> கல்லார்; அறிவிலா தார்."

உலகம் நாளுக்குநாள் நாகரீகத்திலே முன்னேறிக் கொண்டு வருவதை நீங்கள் பார்க்கிறீர்களே. லௌகிக விஷயங்களிலே எத்தனை திருத்தம்! எத்தனை மாறுபாடு! எத்தனை உயர்வு! வைதிக விஷயங்களிலே எத்தனை தெளிவு! எத்தனை விரிவு! எத்தனை ஆழம்!

காற்நடை, மாட்டுவண்டி, ஆள்தபால் என்று வழக்கங்களெல்லாம், கால வேறுபாட்டில் கேவலமென்றும், காலதாமதமென்றும் தள்ளப்பட்டு, புகைவண்டிகளும், புகைரதத் தபால்களும், தந்தி சமாச்சாரங்களும் ஏற்றவையென்று நீங்கள் எண்ணுகின்றீர்களே! மிகச்சில அந்குலங்களே ஆழம் சென்று கோரையென்னும் களைப் பூண்டையேனும் அடியோடு தொலைக்க இயலாத உங்

கள் பழைய மரக்கலப்பைகளை மூலையிலே சார்த்தி விட்டு, சீமைக் கலப்பைகளைத் தேடுகிறீர்களே! முழங்கா லளவே தொங்கவிட்டுக் கட்டியிருந்த கம்பித்துண்டுகளை விட்டு விட்டு, மூன்றரை வீதி நாலு வீதியுள்ள 'நைஸான' மல்வேஷ்டியிருந்தால் நல்லதென்று நினைக்கின்றீர்களே! ஒன்றிரண்டு பேர் அங்ஙனம் பழைய கம்பித்துண்டை உடுப்பாராயின், அவரை கேலி பண்ணக் கூசமாட்டேனென்கின்றீர்களே!

இவற்றிலும், இன்னும் இவைபோன்ற பல செயல்களிலும், காலத்திற்குத் தக்க கோலத்தை அனுசரிக்கும் நீங்கள், ஏன் உங்களது ஒழுக்க விஷயங்களிலும், அறிவு விருத்தியிலும், ஜாதியைக்கியத்திலும் முற்போக்குக்கு வேண்டிய வழியை நாடவும் செய்யாது சும்மா இருக்கின்றீர்கள்? ஒரு வேளை இவ்விஷயங்களெல்லாம் நமக்குத்தகாதவை; எவ்வளவுதான் தலைகீழாகத் தவம்பண்ணி னாலும் இவை நமக்கு வாரா; இவற்றிற்கும் நமக்கும் வெகுதூரம்; நமக் கேற்பட்டது, ஏர்ப்பின்னே சென்று மடிவதுதான், என்று ஆசாபங்க

மடைகின்றீர்களோ? இல்லை 'சுழன்றும் ஏர்ப்பின்னதுலகம்'; ஆதலின் நாமே எவர்க்கும்மேல்; நமது தயவையே பிறர் பார்த்தல் வேண்டும்; ஆதலின் இதுவே ஏற்றதென்று திருப்தி கொண்டுவிட்டீர்களோ? அவ்வாறெல்லாம் எண்ணுதீர்கள்.

தகாதவை என்ற எண்ணம் உதிக்குமேல், தென்னாட்டிலே கன்னிவாடி ஜமீனிலிருந்து சீமை போயிருக்கும் சிங்கம் உங்கள் குலத்தவர் என்றும் மைசூர்ப் பக்கத்திலே சில் நாளைக்கு முன் பெரிய கலாசாலையில் கணக்குப் பண்டிதரா யிருந்த அறிஞர் உங்கள் இரத்த பந்து வென்றும் தெரிந்து கொள்ளுங்கள். அன்றியும், கடவுளின் அம்சமாகவே பிறந்த மனிதன், செய்ய இயலாதது ஏதேனும் உண்டோ? அறிவு பழக்கத்தினு லல்லவா வந்தது? விவசாயவிஷயமாக நமக்கிருக்குஞ்சூக்ஷ்ம புத்தி வேறெவருக்கேனும் உண்டா? இவ்வறிவு எவ்வழியில் செலுத்தினும் ஊடுருவிச் செல்லும். இதிற் சந்தேகம் வேண்டாம். மேலும், நம்மினும் மிகத் தாழ்ந்த குலத்தவர் எனச் சொல்லப்படும் ஜாதிகளிலும் அதி மேதாவிகள் இல்லையா? பின் நமக்கேன் வாராது?

இனி 'ஏர்ப்பின்னதுலகு'; ஆதலால் வேறு படிப்பு அவசியமின்று என்று சொல்லித்திருப்தியடைவீராயின் அவ்வெண்ணம் மிகக்கேட்டிற்கறிகுறி என்றெண்ணுங்கள், எப்பொருளும் ஏக்காலத்தும் ஒரே நிலையில் நிற்பது இல்லை. ஒன்று மேலே போகவேண்டும் அல்லது கீழே இறங்கவேண்டும். உதாரணமாக மனிதனைப் பாருங்கள். சில வயது வரை அவன் சரீரத்திலே வளர்ச்சி காண்கின்றீர்கள். முகத்திலே பளபளப்பு, சரீரத்திலே ஊக்கம், நெஞ்சிலே திடம், அறிவிலே தெளிவு. இவையெல்லாம் ஒரு காலத்திலே அததன் உன்னத நிலைக்கு வருகின்றன. பின் சிறிது சிறிதாகக் கீழே விழ ஆரம்பிக்கின்றன. தலையிலே நரை, முகத்திலே திரை, சரீரத்திலே தளர்ச்சி வந்துவிடுகின்றன. ஒரே நிலையிலேயே நிற்கின்ற மனிதரும் இல்லை, பொருள்களும் இல்லை. நிதானித்துப்பாருங்கள் உங்கள் நிலையை. அதிலே ஏற்றம் இறக்கம் தெளிவாகக் காண்பீர்கள். ஆதலால் நீங்கள் மேல் நோக்கிச் செல்வதற்கான வழி தேடுங்கள். இல்லையேல் கீழே போய் விடுவீர்கள். இதை உங்கள் குல அடிமையாகிய நான் விரும்பேன்; நீங்

களும் விரும்பீர்கள்.

இவ்விஷயம் என் நெஞ்சத்திலே நெடுநாளாக நின்று கட்டை போல் உறுத்திக் கொண்டே வந்தது. என் செய்வது? என் ஒருவனைப் பொறுத்தா? சுமார் 120 கிராமத்தாரை யன்றோ பொறுத்தது? எல்லோரும் ஏகோபித்தல்லவா நமது ஜாதி என்ற கப்பலை இழுத்தல் வேண்டும்? நான் ஒருவனாக இழுத்தால் நகருமா? அம்முயற்சியில் நான் தலையிட்டேன் என்பது கூட அறியாமல் அல்லவா போய் விடும் என்றெண்ணி, உங்களைக் கை கொடுக்கக் கூவுகின்றேன். வாருங்கள் அன்பர்காள்! என் குலச்சிங்கங்களே, வாருங்கள்! வந்து ஏகோபியுங்கள்!

நான் என் சிற்றறிவுக் கெட்டிய வரை, சில வழிகள் கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். அவற்றில் ஒன்றிரண்டு தெரிவிக்கின்றேன். தவறு என்று கண்ட விடத்துத் திருத்தி, நன்று, ஏற்றது என்று கண்டவிடத்து என்னை முதுகுதட்டி நாம் அதைப் பின் பற்றுவதற்கான வழிகளில் உடனுக்குடனே செல்லுவோமாக.

நான் மிகப் படித்தவனுமன்று; மிக லௌகிக விஷயங்களிலே பழக்க முடையவனு மன்று; பல தேச சரித்திரங்களைக் கற்று, அவற்றின் சூக்ஷ்மங்களையறிந்து அவற்றை வழக்கத்துக்குக் கொண்டுவர எண்ணியவனு மன்று; இப்பெருங் காரியத்தைச் செய்து புகழ்பெற இச்சிப்பவனு மன்று. பின் இக்காரியத்தில் என்னைத் தூண்டினதெது? எனக்கு நமது ஜாதியாரிடத்துள்ள அன்பும், பிற ஜாதியார் தம் குலாபி விருத்திக்கான வழிகள்செய்வதைப்பார்த்ததாலுண்டான ஆவேசமுமே. ஈசன் என்னை இம்முயற்சியிலே தூண்டி விட்டான் இக்காரணங்களை முன்னிட்டு. இனி இதற்காக அவன் என்னை ஊக்கும் வழிகளில் எல்லாம் நான்சென்று அவன் கைப்பொம்மையாய் எப்பொழுதும் நின்று ஆடுவேனாக.

"அவனன்றி ஓரணுவும் அசையாது."

இங்ஙனம்
உங்கள் அடிமை,
அழகன்.

ஜாதி.

நம் இந்து தேசத்திலே இதுவோர் பெருங்குறை: ஜாதியப் பேரன்பே மிக அருமையாயிருக்கின்றது. மனிதர் தமது கடமையை நன்கு உணர்கின்றாரில்லை. மனைவி மக்களுக்குத் தாம் செய்ய வேண்டிய கடமை ஒன்றே. இப்பொழுது இவர்களுக்கு ஞாபக மிருக்கின்றது. மற்றவை யெல்லாம்பொய்யாய்ப் பழங்கதையாய்மெல்லப்போய் விட்டன. இவ்வொரு கடமை தானா மனிதருக்குள்ளது? இது மிகச் சிறந்ததே; முதலாவதே. ஆயின் இதோடு எல்லாம் முடிந்து விட்டதா? இல்லையே. இம்மனைவி மக்களுக்குத்தான் நீங்கள் கடமைப் படுவானேன்? காரணம் என்ன? அவரால் நாம் இதம் பெறுகின்றோம். மனைவி நமக்கு உணவு உதவுகின்றாள்; சுக துக்கங்களில் உடனிருந்து அனுபவிக்கின்றாள்; சஹியாகி நமது இல்லறத்தை நடாத்துகின்றாள்; இன்னும் என்னென்னவோ நமக்கிதமானவைகள். சரி, இவையெல்லாம் இம்மனைவி ஒருத்தியாலேயே நாமடைந்து பெறுகளோ? ஆழ யோசித்துப் பாருங்கள்.

பிறந்த வுடனேயே, ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும், காட்டிலே மனுஷ்யப் பழக்க மில்லாத இடத்தில் வைத்து ஆகாரம் முதலியது கொடுத்து வளர்த்து வருவீர்களாயின் அவர்கள் வாழ்க்கை யென்னாகும்? மிருகப் பிராய மாகவன்றோ முடியும். பேச அறிவார்களா? உண்ண அறிவார்களா? உடுக்கத்தெரியுமா? ருசி வகைதெரியுமா? ஏர்ப் பிடிப்பார்களா? மாடு, தங்களுக்கு இன்றியமையாதது என்ற எண்ணமும் உதிக்குமா? சுருக்கமாக, யோசிப்பார்களா? மனுஷரா யிருப்பரா.?

இல்லை, முடியாதல்லவா? மிருகங்களைப் போல் உடையின்றி, நல்ல ஊணின்றி, மரத்திலேறியோ, குழிக்குள் வசித்தோ, எப்படியோ காலங் கழிப்பார்கள். ஆயின், அவ்விருவரும் மனுஷ்ய சகவாசத்தாலல்லவா இத்தனை நாகரீகமடைந்தனர்? நல்லுணவு கிட்டிற்று? நானா எண்ணமும் நேற்று எண்ணமும் அவர்களை நல்வழிப்படுத்தின்றன? மனிதர் தற்காலம் அடைந்திருக்கும் இவைபோன்றபதவிகளுக்கெல்லாம் ஆதாரமென்

னா? மனுஷ்யசகவாசந்தானே; இக்கூட்டமத்தியி ல்சேர்ந்துவசிக்கும்படியான பாக்கியம் கிடைத்த தினலல்லவா இத்தனை பெருமை மனிதருக்கேற் பட்டது. ஆயின், இக்கூட்டத்தாருக்கு. இந்த ஜாதிக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறே மென்பதை நீங்கள் இப்பொழுது எண்ணிப் பாருங்கள். அபாரமாகத் தெரிகின்றதா? இக்கடனை நிவிர்த்திசெய்ய ஏதாவது வழி செய்கின்றீர்களா இல்லையே. மேலும் மேலும் கூட்டத்தாரிடமிருந்து கடனன்றோ வாங்கிக்கொண்டு வருகின்றீர்கள். எப்பொழுது எப்படித் தீர்க்கப் போகிறீர்கள்?

அந்தோ! பரிதாபம்! மணம் செய்வதற்கு முன், மனைவி ஏதோ ஒரு கிராமத்தில் யாரோ ஒருவர்க்கு மகளாயும் மற்றொருவர்க்குச் சகோதரியாயும் இருக்கின்றாள். பெண் பேசி மணம் முடிந்ததோ இல்லையோ, உடனே, பத்து மாசம் வயிற்றில் சுமந்தும், இரவும் பகலும் கண்ணிமை கொட்டாது விழித்தும், தனக்கு நோய்கண்டால் அவள் பட்டினி கிடந்தும், அவள் மருந்துண்டு

பத்தியமிருந்தும், படாத பாடெல்லாம் பட்டு வளர்த்தும் தன்னைக்காத்த தாயை மறக்கின்றாள்; தந்தையை மறக்கின்றாள்; உடன் பிறந்தாரை உதறுகின்றாள்; கணவனே பெரிதென்று கருதுகின்றாள். இதென்ன மாயமோ? அவனும் தன் தந்தை தாயரை மறந்து, மனைவி மிக ஆப்தமானவள் என்று கருதுகின்றான். சரி நல்லது தான்; ஆப்தமானவள் தான்; நான் அதை நிராகரிக்க வரவில்லை இங்கு. ஆனால், மிகச் சிறிதே உதவும் மனைவிக்கு, இத்தனை கடன் பட்டவராகக் கருதி மற்றெல்லோரையும் மறக்கும் நீங்கள் குடும்பத்தாருக்கும், ஜாதியாருக்கும், தேசத்தாருக்கும், உலகத்தாருக்கும், எத்தனை தூரம் கடன் பட்டிருக்கிறீர்கள்? அதை எவ்வாறு தீர்ப்பது என்று யோசித்தீர்களா? இல்லையே.

ஒருவன் தன் குடும்பத்தாரிடமிருந்து, ஓர் நல்ல குணமோ கெட்டகுணமோ, பரம்பரையாக நீக்க முடியாதபடி நிலையாகப்பெற்றுவிடுகின்றான் தன் ஜாதியிலிருந்து சில அம்சங்கள் பெறுகின்றான்; தேசத்தாரிடமிருந்து சில வசதிகள் பெறு

கின்றான்; மனுஷ்ய கூட்டத்திலிருந்தே, பல கண்டத்தவரிடமிருந்தும், அநேக விருத்தி வழிகள் கிடைக்கப் பெற்று விருத்தி யடைகின்றான். இவ்வாறெல்லாம் பெறும் இவன், அவற்றைத் திரும்பத் தராக் கடமைப் பட்டவன் அல்லவா? நாம் என்ன செய்கின்றோம்? குலத்துக்கு என்ன நன்மை செய்கிறோம்; ஜாதிக் கென்ன இதம் செய்தோம்; தேசாபிமானம் நம்மை என்ன நன் முயற்சிகளில் செல்லும்படி தூண்டிற்று? அன்பு, அபிமானம், அருள், என்று சொல்லப்படும், பிள்ளை, பேரன், பூட்டன், என்ற அன்பின் வளர்ச்சி நிலையொன்றும் நாம் அடைந்தோமில்லையே? அன்பொன்றிலேயே இருக்கின்றோம்; மனைவி மக்களே பெரிதென்று கொண்டாடுகின்றோம்; அவற்றைக் காக்கப் படாத பாடெல்லாம் படுகின்றோம். செய்யவேண்டியது தான் ஆயின் மற்றப் பருவங்களையும் அடைந்து அருள் நிலை பெறும் வரை நமது அன்பை விரிப்போம். ஜாதியாருக்கு வேண்டிய இதங்கள் செய்வோம் தேசத்துக்கும், உலகத்துக்கும், நம்மாலியன்ற தொண்டுகளெல்லாம்

செய்து, நம்மை உயர்த்துவோம். வாருங்கள் எல்லோரும். ஏகோபித்த வாருங்கள்! சிறு சிறு பகை எண்ணங்களையும் பொறுமையையும் அடியோடு அறுத் தெறியுங்கள்! எழுங்கள்.

சரித்திரம்.

இது ஒரு ஜாதியின் உற்பத்தி, அதன் வளர்ச்சி நிலைகள், அது வாசம் பண்ணின இடங்கள், அதற்கு உடம்போ டொட்டிய குணங்கள், அதிற் பிறந்த மஹான்கள், அவர்கள் அதை விருத்தி பண்ணுவதற்காகச் செய்த பெருஞ் செயல்கள், என்ற இவை போன்ற விவரங்களடங்கிய நூல். எனது சிற்றறிவுக் கெட்டியவரை அவ்வித வரலாறென்று நமது ஜாதிக் கிருப்பதாகத் தெரியவில்லை. யாரேனும் தெரிவிப்பா ராயின் அவரை எந்நாளும் மறவேன்.

இவ்வரலாறு எதற்கு? இதனால் நாம் அடையும் பயன் யாது என்று கேட்பீராயின், சொல்லுவேன் காது கொடுங்கள்! ஒரு குடும்பத்தையோ, ஒரு ஜாதியையோ, ஒரு தேசத் தவரையோ முன்னுக்குக் கொண்டு வருவது இச்சரித்திரம் தான்.

எப்படி? ராம சரித்திரம் கேட்கும் ஒருவன், ஸ்ரீ ராமபிரானின் பெருமையை எண்ணி எண்ணிக் களிக்கின்றான். அவன் வாழ்க்கையில் ஓர் மாறு பாட்டை உண்டு பண்ண அது காரணமாயிருக் கின்றது. தன்னு லானவரை அப்பெருமானைப் பின் பற்றப் பிரயாசைப் படுகின்றான். ஆகவே, தம் குலத்தவர், தம் ஜாதியவர், பெருமை, தம் பெருமைக்குக் காரணமாக நிற்கின்றதுடன், தம் மால் செய்யத் தகும் காரியங்களே எல்லாம் என் பதை, முன்னோர் செயல்களி லிருந்து உறுதிப் படுத்துகின்றது.

என்னின், நம்மவர் சரித்திரம் ஒன்று இன்றி யமையாததல்லவா? இது இருக்கிறதா என்று நன்றாய் விசாரிப்போம். நெல்லூர் முதலிய ஜில் லாக்களில் நம் இனத்தார் மிகச் செருக்காயிருக் கின்றன ரென்றும், நாகரீகத்தில் வேண்டியவளவு விருத்தி யடைந்திருக் கின்றன ரென்றும் கேள் விப்படுகிறோம். அங்குள்ள பெரியோர் நம் சரித் திரவிஷயத்தில் என்ன செய்திருக்கிறார் என்ப

விசாரிப்போம். இல்லையேல் அதற்காக நமது விருத்தியை நிறுத்தி விடுவதா? மாட்டோம்.

இன்று முதல் நமது சரித்திரத்தை எழுதுவோம். நம்மிலுள்ள பெரியோர், உத்தமர், கொடையாளர், படிப்பாளிகள், பொது நலப்பிரிய என்று இவர் போன்றவரின் வரலாறுகளை எழுதுவோம். அதுவும் இல்லையேல், நாம் உத்தமராய் நடந்து, நமது காலத்தையே ஆதிக்காலமாகக் கொண்டு, மிகப் புதியதும், எவரும் கொண்டாடத் தக்கதுமான ஒரு இனிய சரித்திரம் செய்வோம், என் செய்வது? சரித்திர மிருந்தால் நல்லது. இல்லையேல் அதற்காக வருந்தி மடிவதா? இப்பொழு திருப்பதை வைத்துக் கொள்வோம்; இல்லாததை நாம் பூர்த்தி செய்வோம்; வருந்த வேண்டாம்.

'ஊக்க முடைமை உடைமை.'

பால்ய விவாஹம்.

இது இத்தேசத்தையே பிடித்ததோர் பிணி. மிக உயர்ந்த வகுப்பார் பால்யத்திலே தம் பெண்

களுக்கு விவாஹம் செய்யாவிட்டால், மிகப் பெரியதோர் பாவம் செய்ததாகக் கருதுகின்றனர். என்னத்திலோ ஈச்வரனுக்கே வெளிச்சம்!! ஆயின் நமக்குள்ளோ மிக விசித்திரமாக இக்கொண்டாட்டம் நடக்கின்றது. இக்கூத்து உலகத்தில் நம்மையன்றி வேறெந்த ஜாதியாரிடத்திலும் காணல் அருமை. ஐயோ! பால்யினுக்கு, சில சமையங்களில் அப்பொழுது தான் பிறந்த சில மாஸங்களாகிய சிசுவுக்கு, மிகப்பெரியதும், எழு வருஷம் குமரியா யிருந்ததுமான ஓர் பெண்ணை மணம் புரிவிக்கின்றனர்.

இதன் கருத்தென்னையோ? பந்துத்துவமும் [illegible] உரிமையும் பிறர்க்குப்போதல் கூடாதென்ற [illegible] பாசை யல்லவா, நம்மை இவ்வாறு செய்யும் [illegible] தூண்டுவது? ஐயன்மீர், ஏன் இவ்வளவு நாக [illegible] கம் விருத்தி யடைந்திருக்கும் இக்காலத்திலும் [illegible], உங்களுக்கு இது கேவலமென்று தோன்ற [illegible] ல்லை! பிற நாட்டார், பிற ஜாதியார் நடை உடை [illegible] ரவனைகளைக் கவனிக்க ஏற்ற திறனில்லாததா [illegible] ல்லவா, நம்மவர்க்கு அது குற்ற மென்றும்

தோற்றவில்லை; ஊற்றிலே விஷம் கலந்து விட்டு, ஜலம் ஓடும் வழியெல்லாம் இறைத்தால் விஷம் நீங்குமா? கெடுவதற்கும், தம்புருஷரோடு சேர்ந்து வாழாததற்கும் வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து விட்டு, ஐயோ கெடாதீர்கள் என்று கத்தினால் ஏதேனும் பயன் விளையுமோ? திருடனையும் கூட்டி வந்து, கதவுகளையும் திறந்து வைத்து, சாமான்களையும் அவன் கண்ணிற் படும்படி பரப்பி வைத்து விட்டு, நீங்களும் தூங்குவீர்களானால், திருடனா குற்றவாளி யாவான்? கேட்டிற்கும் தீச்செயல்களுக்கும் சந்தர்ப்ப மில்லாதபடி செய்து கொள்ள வேண்டியது நம்மைப்பொறுத்த கடமையல்லவா? அது செய்யாதவரை நமக்குள் எவ்விதப் பெருமையும் விளைதல் அருமை. மிருகப்பிராயமாக, ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய நாணமின்றி நாமலைந்தால், உலகமெல்லாம் நம்மைப்பார்த்து இகழாதா? வீணே இகழ்வாரைச் சீறிப் பயனென்ன? வழக்கம் வழக்கம் என்ற தொல்லை ஓயாமல் நம்மை வந்து அடிமை கொள்ளுவானேன்? காலதேச வர்த்தமானத்துக்

குத்தக்கபடி ஏற்படுத்திக் கொண்ட ஓர் வழக்கம் என்றைக்கும் சாசுவதமாக அப்படியே இருந்தால் ஏற்குமா? பலன் தருமா? கோடை காலத்துச் செய்யவேண்டிய வேலை வேறு, மாரி காலத்துச் செய்யவேண்டிய வேலை வேறல்லவா? அதை விட்டு, எக்காலத்தும் ஒரே மாதிரியாக எண்ணி நடத்தினால், நம் ஜீவாதாரமான பயிரும் அல்லவா நம்சொன்னபடி கேட்காததோடு நமக்கு மிகக்கேட்டையும் விளைக்கும். இது மட்டோ? பயிரோடு எத்தனை காலமாகத்தான் பழகி வருகிறீர்கள். அவை இல்லாதிருந்த காலமும், இருக்கும் காலமும், அக்காலத்தில் பல விருத்தி தசைகளும் நேரே கண்ணாரக் கண்டிருக்கும் நாம் ஏன் ஒரே பருவத்திலேயே, பழைய வழக்கங்களையே, அவை கேடு, இழிவு, அவமானம் தருவதாயிருந்தாலும் கைப்பற்றிக் கொண்டு மடிய வேண்டும்? இது மிகப் பரிதாபம்! விருத்தி யல்லவா ஜீவன் உண்டென்பதற்கு அடையாளம்? அவ்விருத்தியில்லையேல் நம் குலத்துக்கே கேடு வந்துவிடு மல்லவா?

ஆதலால் காலத்துக் கேற்றபடி, நியாயத்துக்

கிசைந்த விதமாய் நடத்துங்கள். பாலனுக்குப் பக்குவம் அடைந்த பெண்ணைக் கொடுத்து அவளைப் பிறர் நகைக்கத் தெருவிலே அலையவிடும் கேவல வழக்கத்தை அடியோடு தொலைக்க வழி தேடுங்கள்.

அந்தோ! பெண்களுக்குப் பருவம் வருமுன் மணம் செய்தல் தகாது என்று இதுவரை அவ்வழக்கத்துக்குள்ளாயிருந்த மற்றையோர், அதைத்தொலைப்பதற்காகச் சட்டங்கள் செய்யும்படி ராஜாங்கத்தாரை வற்புறுத்திக் கொண்டிருக்கும் இக்காலத்தில், நாம் ஆண்குழவிகளுக்கு மங்கைப் பருவ மாதரைக் கல்யாணம் செய்ய வேண்டா மென்று சொல்ல யோசிக்கிறோம். பலே! நமது விருத்தி மிக நன்று.!

வழக்கு.

அறிவோரே, வேறெவ் விஷயங்களைப் பற்றியும் எனக்குப் பேச பாத்தியதையும், அறிவும், அனுபவமும் காணுதென்று நீங்கள் சொல்லலாம்; ஏற்கும். நானும் கரங்குவித்து ஆமென்று சிரமும்

அசைப்பேன். ஆயின் இவ்விஷயத்திலே எனக்குச் சிறிது அநுபவமுண்டு. ஏன்? இ[illegible]ப்போவானேன்? என் அநுபவம் மிகப்பெரிது; சமானமில்லாதது. இதை இல்லையென்று சொல்ல உங்களால் இயலாது. எப்படி? எனக்குத் தற்சமையம் வயது இருபத்தொன்று நிறைந்து இருபத்திரண்டு நடக்கிறது. இதற்குள் மதுரைக் கோர்ட்டிலும், திருமங்கலம் கோர்ட்டிலும், சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறேன். இது ஓர் பெருமையென்று சொல்ல வரவில்லை; அறியாமையாலும், நம்மில் பெரியோர் நடுவே வந்து அதைத் தீர்த்துவிட எண்ணாததாலும் இவ்வளவு பணம் வீணே விரயமாயிற்று என்று எடுத்துக் காட்டவே சொன்னேன்.

நீங்கள் மதுரைக் கோர்ட்டில் போய், எந்த ஜாதியாருக்குள் அதிகமான வழக்குகள் நடக்கின்றன என்று விசாரிப்பீராயின், நமது ஜாதியிலேயே என்பது தெளிவாய்க் காண்பீர்கள்.

பருத்தி நன்றாய் வெடித்த வருஷங்களிலே வழக்குகள் மிகுதியென்று கேள்விப்பட்டிருப்பீர்

கள். பருத்திக்கும் கோர்ட்டுக்கும் என்ன சம்பந்தம்? பருத்திக்கும் விவசாயிகளுக்கும் சம்பந்தம் உண்டு; விவசாயிகளுக்கும் கோர்ட்டுக்கும் பழக்கம் உண்டு. சம்பந்தம் சரியாய் விட்டதா? விவசாயிகள் இந்த ஜில்லாவில் நம் இனத்தவரே பெரும்பாலார் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆதலால் நமக்குள்ளே தான் வழக்குகள் அதிகம் என்பது தெளிவாயிற்று.

எனையா இத்தனை வழக்கு? இத்தனை பணச் செலவு? நமக்குள் பெரியோரில்லையா? செல்வாக்குள்ளவர் பஞ்சமா? பணக்காரர் அருகிப் போய் விட்டார்களா? வண்டி வண்டியாக இருக்கின்றனர். ஆயின், பிறர்படுந் துயரத்தைக் கண்டு ஆற்ற அவர்களுக்கு மனமில்லை. வழக்கும் சண்டையும் அறியாமையாலல்லவா விளைகின்றன? நம்மினத்தவரை, அறியாதவர் மடையர் என்று பிறர் சொல்வார்களே என்ற நாணம், அப்பெரியோருக்கு இல்லை.

பெரியோரே, வழக்கைத் தீர்ப்பதற்கேற்ற வழிகள் உங்களுக்குத் தெரியாதா? நானு பெரி

யோர், நடு நிலையாக, பக்ஷ பாதமின்றி, எள்ளுக் காய் பிளந்தாற்போல ஒரு முறை வழக்குத் தீர்த்துவிடுவீர்களாயின், பல காத தூரத்தி னின்றல்லவோ வழக்குகள் உங்களை நாடி ஓடி வரும்? நீங்கள் சொன்னபடி கேளாதவர்களை உலகெல்லாம் வெறுக்குமே. கிராமங்களிலே அவர்க்குப் பிழைப்புக்கன்றோ மூச்சு முட்டி விடும். நீங்கள் இத்தர்மத்தொழிலை ஏன் ஏற்றுக்கொள்ளுகிறீர்களில்லை? ஒரு வேளை, அவகாசம் இல்லையென்று விட்டு விடுகிறீர்களோ? அது தகுமா? உங்கள் இனம், இன்னொருவர் முன்னின்று குறை சொல்வது உங்களுக்குக் குறையாகத் தோன்ற வில்லையா? இவ்வளவு ஒதுக்கம் நீங்கள் கைக்கொள்ளல் கூடாது. அன்றியும் ராஜாங்கத்தார், இவ்விஷயத்தில் வேண்டிய உதவியும் அதிகாரமும் உங்களுக்குத் தந்திருக்கின்றனரே! பஞ்சாயத்துத் தீர்ப்பை மாற்ற ஹைகோர்ட்டுக் கல்லவா அதிகாரம் உண்டு, மற்றெக் கோர்ட்டாருக்கும் அது கிடையாதே.

ஆதலால் நீதியாளரே, எவரும் எக்கேடுகெட்டுப் போகட்டும் என்று நீங்கள், சும்மா இருக்

கல் தகாது. கெடுபவர் எவரும் அல்ல; உங்கள் சொந்த இனத்தவர்; உங்கள் நரம்புகளிலே ஓடும் ரத்த பந்துக்கள்; அறியாமையாலோ, வேறெக்காரணத்தாலோ, வழக்குமேல் வழக்கிழுத்துக்கெடுவாராயின் நீங்கள் பார்த்து நிற்றல் தகாது. உங்களை வேண்டுகிறேன், நீங்கள் கவனிக்காவிட்டால் அநேக குடும்பங்கள் கெட்டுப்பாழாய்ப் போகும். அப்பொழுது உங்களுக்கும் பலம் குறையும். ஆகலால், உங்கள் சுய நன்மையைக் கருதியேனும், வழக்குகளின் இடையிற் புகுந்து, வழக்காளிகளுக்குப் புத்தி புகட்டி, இருவரும் சுகமே வாழக் கிருபை பண்ணுங்கள்.

'அன்பின் வழியது உயிர் நிலை'

கல்வி.

நாம் அடைந்திருக்கும் இக்கேவல நிலைகளுக்கெல்லாம் காரணம் அறியாமையல்லவா? ஆயின், இவ்வறியாமையை யல்லவோ முதலில் அடியோடு தொலைத்தெறிதல் வேண்டும். இதற்குவழியென்ன? இதற்கு மற்ற தேசத்தவர் செய்யும்

உபாயமென்ன? அறிவு தருகின்றனர். எப்படி? ஆங்காங்கே பல பாடசாலைகள் நியமித்து, எழுத வாசிக்கக் கற்பிக்கின்றனர். உயர விரும்பும் எவரும் என்ன செய்கிறார்கள்? தம்மக்களையும் தம் இனத்தவரையும் படிக்கச் செய்கின்றனர். இது கூடவா நமக்குப் பிறர் சொல்லி ஆகவேண்டும்? இந்நாட்டிலே உயர்ந்தோரெனக் கருதப்படும் பிராமணருக்குப் பெருமை எக்காரணத்தாலோ? பணச்செருக்காலா! ஜீவாதாரமான தானியாதிகள் விளைவித்துத் தருகின்றனரே! அதனாலேயோ! இல்லை, அந்நியர் படையெடுத்து வந்தால் எதிர்த்து நின்று சண்டை செய்து உங்களைப்பகைவரிடத்திலிருந்து காப்பாற்றுவரே அதனாலேயோ! அவற்றாலெல்லாமல்ல; பல தேசங்கள் கப்பலேறிச் சென்று அந்நாட்டு நாகரீகங்களை அறிந்தும், அங்கு அகப்படும் பொருள்களைச் சரசமாய் வாங்கியும், உதவுவார்களே! அக்காரணத்தாலோ! நீங்கள் அவர்களை, ஈச்வரதுல்யமாக (சமானமாக) எண்ணிச் சாமி என்று இன்றும் கையெடுப்பது? இல்லையே. இவற்றிலொன்றுமில்லையே. கல்விபெற்று

அறிவை விருத்தி பண்ணினதனாலே யல்லவா? மற்றை க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, என்ற நாலினத்தவர்க்கும் அவரவர் தொழிலில் வழிகாட்டி இயக்கும் அறிவுபெற்றிருந்ததனாலல்லவா? பின் ஏன் நமக்கும் அதுதான் உயர்வதற் கேற்றவழி. யென்று தெரியவில்லை ? தெரிந்து அநுஷ்டிக்க முன் வாராதிருக்கின்றனிர்? விரல் விட்டெண்ணுங்கள் நமது கிராமங்களிலே எத்தனை பாடசாலைகள் இருக்கின்றன ? ஐயோ, ஒன்று கூட இல்லையே ? இதென்ன இத்தனை தூக்கம் ? பக்கத்திலே, விருதுபட்டியிலே, பள்ளிக்கூடம் ஒன்று பார்க்கின்றீர்களே. அவர்கள் என்னநம்மிலும் எண்ணிக்கையில் மிகுதியானவரோ ? பணத்தில் அதிகப்பட்டவரோ ? எதிலே மிஞ்சியவர் ? அவர்கள் அப்பாடசாலை ஏற்படுத்து முன் இருந்தநிலையும், அதன்பின் இருக்கும் நிலையும் உங்களுக்குத் தெரியத்தானே செய்கின்றது. மற்றவர் பக்கத்திலிருந்து எடுத்துக் காட்டும் பொழுது கூட நம் மனத்திலே பதியாதது சாபச்செயலோ? அவர்கள் வியாபார விருத்திக்கு எவ்வளவு அநுகூலமாயிற்று அப்பா

டசாலை! பம்பாய், கல்கத்தா, ரெங்கூன், என்ற இடங்களிலெல்லாம் அவர்கள் சென்று மிகவிமரிசையாக வியாபாரம் செய்யக்காரணமாயிருந்தது அப்பாடசாலையல்லவா? இதுஏன் உங்கள் மனத்தில் தைக்கவில்லை? ஆளுக்கு மாசம் ஒன்றுக்குப் பைசா வைத்தாலும் கூட, இதைப்போன்ற பாடசாலைகள் எத்தனையோ ஏற்படுத்தி நடத்த இயலுமே. பெரியோரே, ஏன் இவ்வளவு கவனமின்றி இருக்கின்றீர்கள்? தம்மில் தம்மக்கள் அறிவுடையராயிருப்பது மாநிலத்தில் பொருந்தி வாழும் ஜீவராசிகளுக் கெல்லாம் களிப்புக்கிடமாம், என்ற பெரியோர் வாக்கியம் உங்கள் மட்டில் பொய்யாகவா போகவேண்டும்? உங்கள் சந்ததியார் உலகத்தாரோடு ஒன்றி, அவர் செய்யுங் காரியங்களிலே கலக்கவழியில்லாது தவித்து, உங்களை நிந்திப்பதற்கானவழிகளிலே நீங்கள் நடந்து கொள்ளாதீர்கள். காலம் மாறிக் கொண்டு வருகின்றது. ஒவ்வொரு தொழிலும் அதனதன் சூக்ஷமந் தெரிந்தவர்க்கே அதிகப் பலன் அளிக்கின்றது. மற்றையோர்க்கு மிகச் சுருங்கியதோர் லாபமே கிட்டும்

முற்காலத்திலே படித்த வகுப்பார், நம்போன்ற படிக்கக் கூடாதென்ற வகுப்பாருக்கு வேண்டிய விவசாயத் தொழில் நுணுக்கமெல்லாம் எடுத்துச் சொல்லி நம்மை ஊக்கினர். இப்பொழுதோ, அவர்கள் தம்பாடு பார்க்கத் துணிந்து விட்டனர். நமக்கு நுட்பம் சொல்வார் ஒருவரு மில்லை. ஆதலால், அத்தொழிலிலே நுண்ணறிவு பெற்றிருக்கும் மற்றைய நாட்டாருடன் நாம் போட்டி போடல் இயலாது போகின்றது. பின் பட்டினி கிடந்து மடிய வேண்டியது தான் நமது தலையில் எழுத்தாம். உதாரணமாகப் பாருங்கள்; நெசவுத்தொழிலுக்கு நம் நாட்டில் வந்த கேட்டை. இவர்கள் பண்டைக் காலத்திற் போலவே இப்பொழுதும் நாள் முழுதும் வேலை செய்து நாலு கஜ நீளமே செய்து கொண்டிருக்கின்றனர். மேல் நாட்டார் மிஷின் கண்டுபிடித்த பின் இவர்கள் பாடு என்ன வாயிற்று; அவர்கள் மணிக்கு நாலுகஜம் செய்கிறார்களல்லவா ? அவர்களுடன் போட்டி போட்டு இவர்கள் பிழைப்பார்களா ? முடியாது. அத்தொழிலாளிகள், கஷ்டப் படுவதை நீங்கள்

பார்க்கின்றீர்களோ இல்லையோ ? ஏன் ? இதற்
கெல்லாம் காரணமென்ன ? இவர்கள் பழைய
வழக்கங்களை விடமாட்டோமென்று பிடிவாதம்
செய்வதாலும், அவற்றை மாற்றிப் புதிது செய்ய
இயலாததாலும் அல்லவா? புதிது கண்டு பிடிக்கக்
கல்வியன்றோ பெரிதும் உதவுகின்றது ? கல்வி
பெற்றமேனாட்டார், எத்தனை யந்திரங்கள், எத்த
னை வசதிக்கருவிகள் கண்டுபிடித்து உலகத்துக்கு
உபகரித்திருக்கின்றனர். காசிக்குப் போவதற்கு
ஆறுமாஸமும், ஆயிரக்கணக்கான ரூபாயும் விர
யம் செய்யும் நீங்கள், இரண்டு வாரத்திலும், பத்
திலொருபங்கு பணச்செலவிலும், அப்பிரயாணத்
தை நிர்ப்பயமாய், இங்கிருப்பவரோடு இருந்தது
போல், உங்கள் க்ஷேமசமாச்சாரங்களை ஒவ்வொரு
நிமிஷமும் தெரிவித்துக் கொண்டு, முடிக்க வசதி
கள் பெற்றிருப்பது எதனாலே? கல்விகற்ற மஹான்
கள் செய்து கொடுத்த யந்திரங்களின் உதவியா
லல்லவா? இன்னும் நமது பயிர்த்தொழிலிலே கூட
எத்தனையோ விருத்தி முறைகளும், எருவகைக
ளும் கண்டுபிடித்து, சாதாரணமாய் ஒரு ஏக்கர்
நிலத்தில் நீங்கள் இப்பொழுது விளைவிக்கும் பல

வில், நாலு ஐந்து பங்குபலன் அதிகப்பணச்செல
வின்றி, மனிதர் பாடின்றி விளைவிக்கலாம் என்று
சொல்கின்றனரே.

இவ்வாறெல்லாம் பலதுறையிலும் உபகரிக்கத்
துணையாயிருப்பது எது? கல்வியேயல்லவா? இத்
தகைய கல்வியை, நம்மில் ஒரு பகுதியாயிருந்தவர்
கற்று, தொழில் நுட்பங்களைச் சொல்லும் வேலை
யைமறந்து,தம்பாடு பார்க்கத் தலைப்பட்டனர். நீங்
களும் படித்துத்தெரிந்து கொள்ள மாட்டீர்கள்;
பின் எப்படித்தான் பிழைக்கப் போகிறோம்?
ஐயையோ இதென்ன இத்தனைகேவலம்! இதை
மாற்றுவதற்கானவழி சீக்கிரம் செய்யுங்கள். இல்
லையேல் உலகம் உங்களை மிக ஏமாற்ற ஆரம்பித்து
விடும். இப்பொழுதே கண்டபடி ஏமாறுகிறீர்கள்.
கால் துட்டுச் சாமானை சமையத்தில் கால் ரூபாய்
கொடுத்துக் கூட வாங்குகிறீர்கள். இனியேனும்
இவ்வாபத்துக்களி லிருந்து தப்புவதற்கான அறி
வுபெறுங்கள். கிராமந்தோறும், ஆண் பெண் இரு
திறத்தாருக்கும் பாடசாலைகள் வைத்து, வேலை
செய்யும் நேரம்போக மற்ற நேரங்களில் அவர்கள்

பக்குவ காலவரை படிக்கச் செய்யுங்கள். ஐந்து வருஷப்படிப்புப் போதும். தற்கால நாகரீக ரீதிக்கேற்ற விதமாய் இங்கிலீஷ் படிக்காதிருப்பது மிகக்கேவலமாம். அப்பாஷையிலேஇல்லாததாலே இல்லை. உங்கள் வேதங்கள் கூட அதிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னுமென்னென்ன தொழிலோ, என்னென்னவியாபாரவகைகளோ, என்னென்ன தத்துவங்களோ, நீதிநூல்களோ, கதைகளோ எல்லாம் அப்பாஷையிலிருக்கின்றன. ஆதலின் அப்பாஷையில் எழுதப்படிக்க அவசியம் தெரிதல் வேண்டும்; கணக்கு வேண்டும்; உங்கள் தேசபாஷையிலும் எழுதப்படிக்கத் தெரிய வேண்டும். இவையே மிக அவசியமானவை. இவற்றிலே தேர்ச்சி யடைவதற்கு ஐந்து வருஷங்கள் ஏராளமானவை. வேறெவையும் வேண்டாம், என்று இம்மூன்றையே கற்க ஆரம்பித்தால் ஐந்துவருஷங்களில் ஒவ்வொன்றிலும் ஒப்பற்றபாண்டித்யம் அடையலாம். இருபாலார்க்கும் இது இன்றியமையாதது. அப்பொழுதே, இல்லறம் மிகச்சிறப்பாய், இன்பமயமாய், ஆநந்தவீடாய், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர்

தருவாய், தருநிழலாய், நிழல்கனிந்த கனியாய், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராய், உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்தமண மலராய், மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய், மென்காற்றில் விளைசுகமாய், சுகத்திறம் பயனாய் ஆகும்.

இன்றென்று மிக அவசியமானது, இக்கல்விக்கு ஊற்றாயமைந்தது கேளுங்கள். ஊர்க்கூரோ, அல்லது இருநூறு வீடுகளுக்கு மேற்பட்ட ஊர்களிலேயோ, சங்கங்கள் ஏற்படுத்தல் வேண்டும். இச்சங்க அங்கத்தினர், கொஞ்சம் (மிகப்படித்தவருக் கெங்கே போவோம்.?) படித்தவராயும், பொது நன்மையில் இயற்கையிலேயே பற்றுள்ளவராயும், செல்வாக்குள்ளவராயும், தற்கால நாகரிக விருத்தியின் பெருமையை அறிய ஆவலுள்ளவராயும் இருத்தல் வேண்டும். இவர்கள் காரியங்களைப்பற்றி, காரியங்களை நடத்த ஆரம்பிக்கும் போது, விவரமாய்த் தெரிந்து கொள்வோம். ஆயின், இவர்கள் கடமையில் முதலாவது இது, இளமைப்பருவம் கடந்து, மனிதராய்ச் சம்பாதிக்கும் தசையிலிருப்பவர்க்கு யாதொரு விமோசனமு

யில்லையா? அவர்களை அப்படியே கல்வியில்லாமலும், உலகம் செல்லும் மாதிரியே அறியாமலும் கடைசிவரை இருக்க விட்டு விடுவதா? அந்தோ அது மிகப் பாதகமாமே! அவர்க்கும் ஏதாவது வழி தேடல் வேண்டுமல்லவா? இச்சங்கத்தினர் இத்தகையோர்க்குக் கல்விகற்பிக்குங் கடமையைத் தங்கள் தலையிற்போட்டுக் கொள்ளவேண்டும். பகலிலே நேரங்காண்டல் அருமையே. என் செய்வது? இரவிலே அவர்க்கு வேலை தீர்ந்த சமையத்து, அச்சங்கத்திலே இரண்டு மணிநேரம் வைத்துக் கல்வி புகட்டல் வேண்டும். முதலில் எழுத வாசிக்கத்தெரிவித்தல் வேண்டும். இது மிகவும் எளிது. வழியறியாமலே படிப்பை மிகக் கஷ்டமாக்கி விட்டனர் அநேகர். மிகச் சுலபமான வழிகள் உண்டு. அவற்றை விஸ்தாரமாக அவகாசம் நேர்ந்த போழுது பேசிக்கொள்வோம்.

இனி உலகநடையையும், நாகரீக வளர்ச்சிக்காகப் பிற நாட்டார் செய்யும் முயற்சிகளையும் அறிதற்கு அவசியமான சமாசாரப் பத்திரிகைகள் இச்சங்கத்தவர் வருவித்தல் வேண்டும். இச்சங்கங்க

ளியில்; வாரத்துக்கொரு முறையோ, இருமுறையோ, பெரியோரைக் கொண்டு உபந்யாசங்கள் செய்தல் வேண்டும். அவை, உலகநடைக் கொத்ததாய், ஜாதியின் முன்னேற்றத்துக் கின்றியமையாததாய், அநுஷ்டானத்திற் கியன்றதாய், சுருக்கச் சொல்லு மிடத்து, நமக்கு வேண்டியதாய் இருத்தல் வேண்டும். அதைவிட்டு, சந்திரனில் கடல்களுண்டா, ஆகுபெயர்க்கும் அன்மொழிக்கும் வேறுபாடென்ன; என்ற இவைபோன்ற நமக்கவசியமில்லாத விஷயங்களைப் பற்றி அங்கே பேசல் கூடாது.

'பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல் மக்கட் பதடியெனல்.'

மஹா ஜன சபை.

சில வருஷங்களுக்கு முன் கள்ளிக்கூடி சத்திரத்துக்கருகில் இம் மஹாஜன சபையொன்று, "விதவைகளின் கதி" யை நிச்சயிக்கவும், இன்னொரு சமையம் திருப்பரங்குன்றத்தில் ஏதோ ஓர் விஷயத்தைப் பற்றிப் பேசவும் கூடியதென்றும், அப்போது அக்கூட்டத்தின் மஹிமையைக்

கண்டவரெல்லாம் கொண்டாடும்படி அத்தனை ஒற்றுமை தோன்றிற்றென்றும் சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. அதற்காக மிக ஆநந்தமடைகிறேன்.

ஆனால், அதன் பின் அம்மாதிரிக் கூட்டம் இது வரை ஒன்றும் நடக்கக் காணோமே. ஏன்? காரணம் என்ன?

நமக்குள் அவ்வொரு குறைதான் இருந்ததோ? அது நீங்கியதும் குறைகள் எல்லாமே நீங்கி விட்டது என்று எண்ணமா? இல்லை. இன்னும் எத்தனையோ குறைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர் திருத்தும் பொறுப்பை அச்சபை தன் தலைமேல் போட்டுக் கொண்டாலன்றி வேறு வழியில்லை.

இனி இச்சபை அமைப்பு முறை: இச்சபைக்கு அங்கத்தவர்களோ, காரியஸ்தர்களோ, முக்கியஸ்தரோ நமக்குள் தெரிந்தெடுத்து, அது வருஷா வருஷம் ஒரு முக்கியமான கிராமத்திலோ பட்டணத்திலோ கூடும்படி செய்யவேண்டும்.

கிராமந்தோறும் உள்ள கல்விச் சங்கங்களும் பாடசாலைகளும் இம் மஹா ஜன சபைக்கு 'மெம்பர்கள்' தெரிந்தெடுக்கும் பாரத்தை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அம் மெம்பர்களினின்று தெரிந்தெடுத்த சிலரே (வடித்தெடுத்த ரசமே) இம் மஹா சபைக்குக் காரியக்காரராதல் வேண்டும். இதில் நமது ஜாதியின் முன்னேற்றத்திற்கு அவசியமான விஷயங்களைப் பற்றிப் பேசி, தீர்மானம் செய்து, அத்தீர்மானத்தை நம்மவர் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்படி செய்தல் வேண்டும்.

பாருங்கள் மற்ற ஜாதியாரெல்லாம் அம்மாதிரிக் கூட்டங்கள் வருஷத்திற்கொரு முறை சென்னை போன்ற முக்கியமான பட்டணங்களிலே கூட்டி, அதில், மஹா மேதாவிகளாய், பரோபகார சீலர்களாய், உத்தமோத்தமராய், ராஜாங்கத்தாரால் கௌரவம் செய்யப்பட்டு பல தேச சரித்திரங்களைக் கற்று அநுபவமுள்ளவராயிருக்கும் பெரியோரை அக்கிராசனாதிபதியாக்கி, அவர் வாயிலாகத் தமது ஜாதியின் அபிவிருத்திக்கான வழிகளைக் கேட்டு நடத்தவும் செய்கின்றனர். சமீபத்

திலே சென்னையில் நடந்த நாடார் மஹாஜன சபையும் அதன் அக்கிராசனாதிபதி கனம் சங்கர நாயர் அவர்கள் கூறிய புத்திமதியும் நீங்கள் கேட்டிருக்கலாமே.

ஆதலால், அத்தகைய சபை கூட்டுவதற்கான வழி செய்யுங்கள். அன்றியும், நமது ஜாதியின் அபிவிருத்திக்கென்று, பிரத்தியேகமாக ஒரு பத்திரிகை வெளிப்படுத்தி, அதிலே அங்கங்கே நடைபெறும் முயற்சிகளும், திருத்தங்களும், வெளியிடுங்கள். பத்திரிகை இல்லாத தேசம் தேசமல்ல. நாகரீகம் அங்கு மட்டுப்படுமேயன்றி, விருத்தியடையாது. மதுரை ஜில்லாவிலே, திருமங்கலம் தாலூக்காவின் ஒரு மூலையிலிருக்கும் நம்மவர், அடுத்த திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சந்திரகிரி யென்ற ஓர் ரெட்டி நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரைப் பற்றிச் சொல்லக் கேட்டதுண்டா இல்லையே.

உங்களுக்கு இது கேவலமாகத் தோன்றவில்லையா? இது மிகவும் விசனிக்கத்தக்கது! இப்படிப் பரந்த உணர்ச்சியில்லாத நாம், என்ன காரியங்

கள் சாதிக்கப் போகிறோம்! ஒன்றும் முடியாது. ஆதலால் பத்திரிகை உடனே ஆரம்பியுங்கள்.

நம்மவர்களிலே, படித்த மேதாவிகள் எத்தனையோ பேர், வக்கீல்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு மிக மிஞ்சிய அவகாசம் உண்டு. அவர்களோ, அவர்களை ஒத்த அறிவும், பொது நலப் பிரியமுமுள்ள எவரோ அப் பத்திரிகையின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, நமது ஜாதிக்கு இதமானவைகள் எழுதி, நம்மைப் பலவிஷயங்களிலும் தெரிந்தவராக்கி, பிற ஜாதியாரையொப்ப ஒன்றுக்கி உயர்த்தல் வேண்டும். இப்படிச் செய்வாராயின், ஜாதிக்கு அவர் பட்டுள்ள கடனை ஒருவாறு தீர்த்து ஜாதியாரின் மேல்செல்வாக்கை வேண்டியவளவு பெற்று, தாம் நினைத்தபடி தம் ஜாதியாரை உயர்ந்த நிலையில் தம் ஆயுட் காலத்துக்குள்ளாகவே பார்த்து ஆனந்திப்பார் என்பதில் ஐயமேயில்லை.

ஆதலின், மஹாஜனசபை வருஷத்துக்கொரு முறை கூட்டுங்கள். ஒன்றோ பலவோ பத்திரிகைகள் ஏற்படுத்தி எல்லாருக்கும் கண் திறந்து விடுங்கள்!

இங்கிலீஷ் படிப்பதற்காக, மதுரை, திருநெல்வேலி, திருச்சி, பசுமலை போன்ற இடங்களுக்குப் போய் வசிக்கும் சகோதரர்களே! உங்களுக்கோர் வார்த்தை, அத்துடன் இதை முடிக்கின்றேன்.

நம் பெரியோர்க்குத்தான் மேனாட்டாருடன் பழக்கமில்லை; அவர் பாஷையின் பெருமையும், அவர் அடைந்திருக்கும் உன்னத ஸ்திதியும், அவர் விஷயங்களைத் துருவித் துருவி ஆயும் சூக்ஷ்ம புத்தியும், ஒவ்வொரு நாளும் அவர் கண்டுபிடிக்கும் அற்புத யந்திரங்களால் உலகம் அடையும் சுகமும், நம் பெரியோர்க்கு நன்றாய் விளங்கவில்லை. ஆயின், உங்களுக்கு இவையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கமல்லவா? பின்ஏன் நீங்களும் சும்மாயிருக்கின்றனிர்? அவர் நாட்டிலே அவர் தம்ஜாதியையேனும், அல்லது ஓர் விஷயத்தையேனும் பற்றிநின்று முன்னுக்குக் கொண்டுவர விரும்புவரேல், அதற்காக அவர் இரவுபகல் தூக்கமற்றுழைப்பது நீங்கள் அறியாததா? எத்தனைபேர் உலகுக்கு நன்மை செய்யத் தம் நன்மைகளை மறந்து பாடுபடுகின்றனர்? உதாரணமாகப்

பாருங்கள்! பெண்களில் சிலர், தங்கள் இனத்தவருக்கும், பாராளும் மன்றில் மெம்பர் நியமிக்கும் பாத்தியதை கிடைக்கவேண்டுமென்று எண்ணினர்; எவ்வளவு பாடுபடுகின்றனர்? தெருவிலே நின்று தொண்டை வெடிக்கப் பிரசங்கமாரி பொழிகின்றனர்! கடல்புரண்டு வந்ததுபோலத் தங்கள் இனத்தவரையெல்லாம் சேர்ந்து மந்திரிவீட்டை மோதுகின்றனர். பிடித்துச் சிறையிலடைத்தால், பிடிகவளம் உட்கொள்ள மாட்டோமென்று பிடிவாதம் செய்து சிறைவிடுதலை செய்யப்படுகின்றனர். இப்படி எத்தனையோ பாடாய்ப்பாடுகள் பட்டுத் தாங்கள் எடுத்தகாரியத்தைத் தங்கள் உயிருள்ளளவும் முடிக்காமல் விடுவதில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டு சாதிக்கின்றனரே? இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் கேட்டதில்லையா? தெரிந்தும் உங்கள் ஜாதியாரை உயர்த்துவதற்காக இதுவரை என் நீங்கள் ஒன்றுஞ் செய்யவில்லை? ஒரு பிரசங்கம் உண்டா? ஒரு காரியமாவும் உங்கள் குலம் அடைந்திருக்கும் இழிநிலையை எண்ணிக்கண்ணீர் வடித்தீர்களா? அட

டா! மேனாட்டுப் பெண்களுக்குள்ள உயர்நோக்கங் கூட, ஆடவராகிய உங்கள் மனத்தில் இல்லாமலா போகவேண்டும்? என்ன தான் செய் கிறீர்கள்? யாருக்காகத்தான் படிக்கிறீர்கள்? அறிவுள்ளவன் எப்பொழுது நம் குலத்திற் பிரப்பான், நம்மையும் நாகரீகமடைந்திருக்கும் மற்றஜாதியரோ டொப்ப உயர்த்துவான், என்றெண்ணி ஏங்கித்தவித்துக் கொண்டிருந்த நாங்கள், நீங்களும் இப்படி உங்கள் கடமையை மறந்து, உங்கள் பாடே பெரிதென்றெண்ணி விட்டால் வேறெவ் வழியில் முன்னுக்கு வருவது? வேறெவர் எமக்குக் கைகொடுப்பார்?

தற்கால நாகரீகத்துக்கேற்ற விதமாய் நடை, உடை, பாவனை மாற்றிக் கொள்ளும் நீங்கள், உங்கள் இனத்தாரிடம் இவற்றின் தாழ்வைக் காணவில்லையா? சில சமையங்களில், நம்மவரில் பலர் நடை உங்களை அவர் இனத்திற்சேர்ந்தவர் என்று சொல்ல நாணும்படி கூடச் செய்கின்றதல்லவா? ஐயோ! நம்மவர் இவ்வளவு மிருகப் பிராயமாய் இருக்கின்றனரே என்று, எப்பொழுதேனும் நீங்கள் ஏக்கின துண்டா?

'நல்லாண்மை யென்பது ஒருவற்குத் தான்பிறந்த இல்லாண்மை யாக்கிக்கொளல்' அல்லவா?

உங்கள் குலம் இந்நிலையில் இருக்கும் வரை நீங்கள் உயர்ந்து விடலாம், ஆண்மக்கள் ஆகலாம் என்ற எண்ணத்தை அடியோடு விட்டு விடுங்கள்.

அடபாவமே! கோடை விடுமுறை நாளிலும், காலவிடுமுறை நாளிலும் உங்களை பொத்த கிறிஸ்துவச் சிறுர்கள், அணிஅணியாகச் சென்று தம் மினத்தவ ரல்லாத பல்லோர்க்கும் தாம் உயர்ந்த தெனக் கொண்டாடுகின்ற கிறிஸ்துவின் உபதேசமொழிகளைச் சொல்ல கிராமாந்தரங்களுக்கு வருவது நீங்கள் அறியாத தொன்று? அங்கே அவர்படும் பாடுகளையும் கிராமத்தார் செய்யும் உதாசீனங்களையும் எள்ளளவும் மனத்தில் கொள்ளுகின்றனரா? கொண்டு, தம்காரியத்தில் பின் வாங்குகின்றனரா? இல்லையே! மேலும் மேலும், அவர்க்கே யல்லவா, உபதேசம் செய்ய முந்துகின்றனர்?

சகோதரர்களே, நீங்கள் ஏன் இதை யெல்லாம் எண்ணுகின்றீரில்லை. உங்கள் இனத்தார் எக்கேடும் கெடட்டும் என்று எட்ட நின்று பார்த்துக் கொண்டிருப்பீர்களோ? சீ! அது பிசகு. அவர் உங்கள் இரத்தத்தவர்; உங்கள் தாயும் தந்தையும் சகோதரரும். நீங்களும் கவனியாவிட்டால் அவர்க்குக் கதியேயில்லை. அவசியம் நீங்கள்தான் அவர்க்கு எடுத்துச் சொல்லவேண்டும். உங்களுக்கே எடுத்துச்சொல்ல விஷயமும் அறிவும் உண்டு. உங்களை அவமதிப்பாரென்று எண்ணுதீர்கள். நீங்கள் பெரிதெனக் கொண்டாடும் உங்கள் மதத்தை இழித்து, மற்றொருமதத்தை உயர்த்திச் சொல்லவருகிறார்களே, உல்லங்கனம் செய்கிறார். உங்களை அங்கனம் இழிப்பரா? தலையிலன்றோ வைத்துக் கூத்தாடுவர்? வேண்டிய வெல்லாம், வேண்டிய அளவன்றோ உதவி, உங்களை ஊக்குவார்? அதுமட்டுமா? இப்பிரசங்கங்கள் நீங்கள் செய்ய ஆரம்பித்த அன்றே, உங்களைத் தத்தம் அருமைப் பிள்ளைகளினும் அருமைப் பிள்ளையாய் எண்ணி வளர்க்கவும், உமக்கு இல்லாதன கொடுத்துதவவும், இன்னும்

வய்ச விருத்தி வழி.

எத்தனையோ வகைகளில் உம்மை உயர்த்
அன்றோ பாடுபடுவர் ?

அன்பீர, உங்களை யன்றி அத்தனை தொழ்க்காக்
ப்பவர் வீழ்ச்சிநிலையை எடுத்துச் சொல்ல
ஆளில்லை. ஆதலின், நீங்கள் சும்மாயி
தகாது. நல்லபிள்ளைகள் எப்பொழுது பிறக்கும்,
எப்பொழுது நம்குலம் உயரும் என்று எண்ணிக்
கொண்டிருந்த எங்களை, நீங்களும் ஆசாபங்கம்
அடைய விட்டுவிடாதீர்.

எழுங்கள் ! எழுங்கள் !! கருதியகருமம்
கைகூடும்வரை உழையுங்கள் !!!

முற்றிற்று.

நன்றி கூறல்.

குலாபிமானிகளே !

இப்புத்தகத்தில் வேண்டுகோள் என்னும் த
கீழ், பொருள் செலவித் தாயின் கண்ணோக்கம்
இட்டவில்லை யென்றும், அதுபற்றி யாம் காலம் த
காரியம் கெடும் என்றும் எண்ணி வெளியிட முன்
மென்று கூறியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆ
இப்படி உபேக்ஷை செய்வது போல பாவனை பண்
ச்மாட்டி, பின் இதை அச்சிட்டுக் கொண்டிருக்கு மிடை
லேயே, எமது முயற்சியைக் கொண்டாடி எம்மை ஆதரி
வும் முன் வந்து விட்டாள் என்று கூற சந்தர்ப்பம் இடை
ததுபற்றி ஆநந்திக்கின்றோம்.

மலைப்பட்டி ஸ்ரீமாந், பா. ரா. ம. ராமசாமி செட்டி
ரவர்கள் எமது பணமுட்டுப் பாட்டைக் கேள்விப்பட்டு,
மாகவே பணம் உதவ முன் வந்ததை உங்களுக்குச் சொ
வும்; அப்பெருமானை முன் மாதிரியாக வைத்து, நம்மி த்
தவர் இது போன்ற பொதுக் காரியங்களுக்கு உதவுவா ரா
யின் நமது ஜாதியின் அபிவிருத்தி, கைக்கெட்டியது போல
அவ்வளவு சமீபத்தி லிருக்கிறதென்று உறுதி கூறவுமே
இப்பத்திரம் எழுதியது. இப்படி, இந்நூலைக் கஷ்டமின்றி
வெளி வந்துலவச் செய்து நம்மவருக் கெல்லாம் இப்படி
நடவுங்கள் என்று வழியும் காட்டிய அவ்வள்ளலார்க்கு நாம்
என்றும் கடமைப் பட்டிருக்கிறோமென்பதை இச்சிறு அற
கையால் வெளியிட்டுள்ளோம்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

ஆசிரியர்.